Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞூ (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எச] யாழ்ப்பாணம்:- சுபகிருது ஞூ வைகாசிமீ கஉ உ வெள்ளிக்கிழமை (25 May. 1962) [இல-எ]

உலகியல் அலை

# ‘உடையது விளம்ப வேண்டும்’

## என்று உறுக்கும் சட்டம்!

### மந்திரிமார் வழிகாட்டினல் மற்றவர்கள் பின்பற்றலாமே!!

பொன் பொருள் பண்டம் யாவும் அரசறியவே யாரும் வைத்தாளுதல் வேண்டும். இந்த அடிப்படையில் ஒரு சட்டத்தை இயற்றத் திட்டம் போடப்பட்டிருக்கிறதாம். பாராளுமன்றத்து அங்கத்தவர்கள் உள்ளூர் ஆட்சிச்சபை உறுப்பினர், உத்தியோகத்தவர்கள், அவர்களின் மனைவி மக்கள் அனைவரும் தங்கள் தங்கள் ‘இருப்பு’ என்ன என்று வெளியிடவேண்டி வரப்போகின்றது. இது எப்பொழுதோ நடைபெற்றிருத்தல் வேண்டும் சட்டம் இயற்றப்படாமலே.

வெளியிடுவது யாருக்கு?

அரசினருக்குமட்டுமா அல்லது பகிரங்கப்படுத்தி ஏனையமக்களுக்குமா என்ற கேள்வி ஒன்று உண்டு. கைக்கூலிபெற்றுக் காலங்கழித்து, வெள்ளைவேட்டிக் கள்வர்களாக வெளியுலக மதிப்புப் பெறுகின்றவர்களுக்கு இச்சட்டம் வேப்பங்காய்போல வெருட்சி கொடுக்கும் என்றாலும் உள்ளதை அறிய அரசநிருவாகத்துக்குப் போதிய ஆற்றல் இருககின்றதா என்பது சந்தேகமே.

வருமானவரியைச் சரியான வகையிற் கணிக்க உண்மையான உடையது விளம்புதல் இருக்கின்றதா என்று பொதுசனம் கேட்பதில் நூதனமொன்றுமில்லை. ——

### மத்திய மகாசபையில் வள்ளுவர் - ஞானசம்பந்தர் குருபூசைவிழா

—:—

“காலத்தைப் போற்றுவது சைவசமயம்”. “காலத்தினல் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தில் மாணப்பெரிது” என்பது வள்ளுவர் வாக்கு. ஆகவே காலம் தவருது கடமைகளைச் செய்ய வேண்டும். நாம் எதை ஒழுங்கு இன்றிச் செய்யாது தவறுகிறமோ அது வாழ்க்கையிலே நியதி பெறுகிறது. அந்தத் தத்துவத்திலேதான் ஜெபம், சமய வாழ்வில் தனி இடம் பெறுகிறது.” இவ்வாறு சுவாமி சச்சிதானந்தா வைகாசி 9ம் திகதி (22-5-6?) கண்டி மத்தியமாகாண சைவ மகா சபையினல் நடத்தப்பெற்ற திருஞானசம்பந்தர் குருபூசை — வள்ளுவர் விழாவின்போது அறிவுரை நிகழ்த்தினர். மேற்படி விழா கொழும்பு வீதி தெற்கு, சந்தை, காட்டுக்கலை ஆகிய இடங்களில் உள்ள சைவ வர்த்தகர்களின் உபயமாக நடத்தப்பெற்றது.

ஆராதனையும், பக்திப் பாடல்களும் - திரு. செல்லையாக்குருக்கள் அவர்களால் நடத்தப்பட்டது.

“தோடு” என்று உமாதேவியாரைக் குறிக்கும், “செவியன் என்று சிவபெருமானைக் குறிக்கும், “தோடுடைய செவியன் என்ற முதலடிகளைக் கொண்டு திருஞானசம்பந்தர் பாடிய முதல் தேவாரத்தில் அர்த்தனரீஸ்வரத்தின் தத்துவம் அடங்கி இருக்கிறது” என்று பண்டிதை சி. இ. லட்சுமி அவர்கள் சொற்பொழிவின் போது குறிப்பிட்டார்.

“வள்ளுவர் நெஞ்சம்” என்ற பொருள்பற்றிப் பேசிய திருவாளர் வி. கந்தவனம் பி. ஏ. அவர்களும் பேசினர்.

பின்னர் திருமதி கமலா விவேகானந்தரின் இன்னிசைக்கச்சேரி பக்கவாத்தியங்களுடன் சிறப்பாக நடைபெற்றது.

——

### இலங்கையர்கோனுக்கு நினைவு விழா

—:—

ஈழம் கண்ட தலைசிறந்த நாடக ஆசிரியர்களுள் ஒருவரும் தாயகமும் தக்க மரியாதை தந்து கௌரவித்த சிறுகதை எழுத்தாளருமான இலங்கையர்கோன் அவர்களின் முதலாவது நினைவு தினத்தைப் பெருவிழாவாகக் கொண்டாடவும் அவ்விழாவையொட்டி இலங்கை எழுத்தாளரிடையே சிறுகதைப் போட்டி ஒன்றைப் பெரிய அடிப்படையில் நடாத்தவும், நாடகங்கள் நடிக்கவும் கல்முனைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் தீர்மானித்துள்ளது எனத் தெரியவருகிறது.

### நற் சிந்தனை

எள்ளப் படாரறிஞர்
எப்பொழுதும் நல்லறமே
கொள்ளப்படுவார் குறித்து.

### கருத்துக் கலசம்

சுதந்திரம் என்பது குறுகிய காலத்தில் கிடைக்கக் கூடிய ஒன்றல்ல. எத்தனை ஆண்டுகள் சென்றாலும்—மன உறுதியுடன் தொடர்ந்து போராட வேண்டும்.

மு. சிவசிதம்பரம் (பா.உ)

x x x

எழுத்தாளன் ஒருவனுடைய தனித்தன்மையே படைப்பு இலக்கியத்தின் உயிர்நாடி, இந்த தனித்தன்மை இல்லையென்றால் இலக்கியமில்லை, எழுத்தும் வெறும் செய்திக் கோவையாகவோ வட்டிக் கணக்கு வாய்ப்பாடாகவோ பண்டசாலைப் பட்டியலாகவோ தான் முடியும்.

x x x

யதார்த்தமென்று சொல்லிக்கொண்டு உடலில், உள்ளத்தில், சமுதாய அமைப்பில் உள்ள குறைகளைமட்டுமே, மனம் பொருந்தாமல், பேசும்பேச்சு வெறும் சாக்கடை ஆராய்ச்சியாகிவிடும். இலக்கியமாகாது.

- ஸ்ரீனிவாச ராகவன்.

x x x

ஈழநாட்டு எழுத்தாளர்கள் படைக்கும் கிராமியச் சூழலில் அமைந்த கதைகளை இந்தியப்பத்திரிகைகள் வெளியிட்டால்தான் இந்திய மக்கள் அவற்றைக் கற்றுணர்ந்து கொள்ள முடியும்.

-கனக. செந்திநாதன்.

x x x

வள்ளுவர் பிறந்ததால் தென்னுடு பெருமைப்பட்டாலும் வள்ளுவர் ஈழத்தில் பெருமைப்படுத்தப்படுகிறார்; போற்றப்படுகிறார்.

-ஐயன் பெருமாள் கோனர்.

x x x

இன்று தமிழரிடையே நான் என்ற உணர்ச்சித் தடிப்பேதவிர தமிழன் என்ற இனத்தொகுப் புணர்ச்சியைக்காண்பதரிது.

-சு, வித்தியானந்தன்.

ஓ

எல்லா வுலகமு மானுய் நீயே ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே ஞானச் சுடர்விளக்காய் நின்ருய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே புகழ்ச் சேவடி யென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே திருவையா றகலாத செம்பொற் சோதி

•••○○•••

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச்சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோகமாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

### சங்ககால வாழ்வு நெறிச் சால்பு

சென்ற 23-5-62 புதன் கிழமை டில்லி பல்கலைக் கழக விரிவுரையாளரும் சிறந்த தமிழ்க் கவிஞருமாகிய சாலை, இளந்திரையன் அவர்களுக்கு குரும்பசிட்டி சன்மார்க்க சபையாதரவில் வரவேற்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. பண்டிதர் பொ. கிருஷ்ண பிள்ளையவர்கள் தலைமை வகித்தார்கள்.

திரு. சாலையிளந்திரையன் தமது சொற்பொழிவின் போது சங்ககாலத் தமிழிலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டும் அக்காலத் தமிழர் வாழ்க்கை நெறி முறைகளில் நின்று இன்றுவரை வாழ்ந்து வந்திருந்தால் நாம் இவ்வளவு பிற்போக்கான நிலைக்கு வந்திருக்கமாட்டோம் என்று குறிப்பிட்டார்.

திருவாட்டி கனகசவுந்தரி இளந்திரையனும் சொற்பொழிவாற்றினர்கள்.

ஆண்களும் பெண்களுமாக ஏராளமானேர் கலந்துகொண்ட இவ் விழா குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் நிகழ்ந்தது.

கனக. செந்திநாதன் நன்றியுரை வழங்கினர்.

### தென்கிழக்கு ஆசியாவில் தலைசிறந்த நூல் நிலையம்

———○———

யாழ் - ‘மக்கள் நூல் நிலையக்’ கட்டட நிதிக்காக நூல் நிலைய வளவில் யாழ் - விளைதை விவசாய கைத்தொழில் பொருட்காட்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பொருட்காட்சியைத் திறந்து வைத்துச் சொற்பொழிவாற்றிய யாழ் நகரின் முதலாவது பெரும்பிதா திரு சாம் சபாபதி அவர்கள் தமிழர்கள் இறை கோட்டங்களுக்கு அடுத்ததாக அறிவுக்கோட்டங்களாகிய நூல் நிலையங்களையும் பள்ளிக்கூடங்களையுமே மதித்துப் போற்றுகிறார்கள் என்ற அரிய கருத்தை வெளியிட்டார்.

முன்னைநாள் பெரும்பிதாவாகிய திரு. துரைராசா அவர்கள் பேசும் போது இந்த நூல்நிலையம்

தொடர்ச்சி 4ம் பக்கம்)

### எல்லாம் சிவமயமே

★

“அளவையூர் - சஞ்சீவி”

இராகம் : வாசஸ்பதி. தாளம்: ஆதி.

பல்லவி

சாந்தி யடைய வழியுண்டு — நெஞ்சே
சஞ்சலம் தீர்த்திட ஐந்தெழுத் துண்டு

அநுபல்லவி

நீந்திடும் பிறவியாம் நெடுங்கடற் கரையை
நீயடைந் திடவே நினைசிதம் பரத்துரையை

சரணம்

கொல்லா விரதஅன்புக் கொடியசைந் தோங்க
கோபம் களவுகாமம் குத்திரம் பொய்நீங்க
எல்லாம்சிவ மயமே எனும்பண்பு தேங்க
என்செயல் இங்கொன்றில்லை என்கிற நெறிதாங்க

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

சுபகிருது ஹூ வைகாசி மீ
கக ௳ வெள்ளிக்கிழமை


## மூதூர் மோதல்

—0—

நடைபெற இருக்கும் இடைக்காலத் தேர்தல்களில் மிக முக்கியமான கேந்திரத்தானததில் இருக்கின்றது மூதூர்த்தெரிவு. என்னை? பலவேறு கட்சிகளும் இனங்களும் பங்கு பற்றுகின்றமையால் எழுகின்ற நெருக்கடியே காரணம் என்க.

மூதூர் பாரம்பரியமாகத் தமிழ்பேசும் மக்கள் பரந்து வாழ்ந்துவரும் பிரதேசத்திலுள்ள தொகுதி. தமிழ்பேசும் மக்களே பெரும்பாலானோராய் விளங்கும் பகுதி. ஆகவே இவ்விடத்தின் சார்பாகப் பாராளுமன்றஞ் செல்கின்றவர் எத்தகையவராய் இருத்தல் வேண்டுமென்று இயல்பாகவே யாவர்க்கும்விளங்கும். அன்றியும் இரண்டு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யும் தகுதியுடைய தொகுதியாய் அமைந்திருக்கின்ற மூதூரில் ஒரு அங்கத்தவர் ஒரு இனத்தைச் சார்ந்தவரா யிருக்கின்றார்.

வாக்காளர் பொதுவாக நோக்கவேண்டிய பலவற்றுள் தொகுதியின் பொது நலன் ஒன்றாகும். கட்சிகளும் கட்சிகள் சார்பாக அபேட்சகர்களாக முன்வந்திருக்கின்றவர்களும் வாக்காளர்களுக்குத் தங்கள் கொள்கைகளையும் இதுவரையும் ஆற்றிய தொண்டு முதலியவற்றையும் இனிச் செய்யவிருக்கும் பணியின் திட்டத்தையும் விளக்கி வைத்தல்வேண்டும். ஆனால் அத்தொகுதி மக்களிலே நாட்டுநலங் கருதி யுழைக்கும் பெரியார்கள் இப்பொழுது முன்வந்திருக்கும் அபேட்சகர்களின் அரசியல் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைத்து அதை அலசி ஆராய்ந்து இவர்களில் எந்த அபேட்சகர் அரசியல் அறிஞர், அநுபவசாலி, கொள்கையைத் தன்னலங் கருதி அடிக்கடி மாற்றாத நேர்மையாளா தொகுதி முழுவதுக்கும் அதன பலவேறு இனங்களின் உரிமைகளுக்கு விபரீதம் விளைவியாதவாறு தொண்டாற்ற வல்லுநர் என்றெல்லாம் நியாயங் காட்டிச் சுட்டி முடிவு சொலலுதல் வாக்காளருககுப்பேருதவியாகவிருக்கும்.

மூதூர்த் தெரிவு வருங்கால அரசியற் போக்குககு வழிகாட்டியாக அமைய வேண்டும். அதற்கு இந்த இடைக்காலத் தேர்தல முடிவு மிக முக்கியமானதாகும். நாட்டின் நலனும் ஊரின் உரிமையும் மக்கள் அனைவரின் வாழ்க்கை வளமும் எந்த அபேட்சகரால் காப்பாற்றப்பட வேண்டும் என்ற கேள்விக்கு வாக்காளர் உற்றவகையில் மறுமொழி அளிப்பதற்கு அவர்கள் அபேட்சகர்களின் அரசியல் வாழ்க்கை வரலாற்றையும் தேசத்தொண்டின் பெறுபேற்றையும் அறிதல் அத்தியாவசியம்.

—

# வேதாகம சமயம் வைதிக சைவம்

[ பண்டிதமணி திரு சி. கணபதிப்பிள்ளை ]

நமது சமயம் வைதிக சைவம். அஃது இரு சமயத்தின் கூட்டரவன்று; ஒரு சமயம். வைதிகம் பூர்வபாகம். சைவம் உத்தர பாகம்.

வைதிகம் வேத நெறி. அந்நெறி தழைத்தோங்கியவழி உதிப்பது சைவம்.

வைதிகம் சைவத்தில் சென்று முற்றுவது. அங்ஙனம் சென்று முற்றாதவழி அது வைதிகமாகாது; அவைதிகமாம். சைவம் - சிவ சம்பந்தம்.

சைவம் வைதிகத்தின் வழிவருவது. அங்ஙனம் வாராதாயின் அது சைவமாகாது; அசைவமாம். அசைவம் பாசண்டம் எனவும் படும்.

வைதிக சைவம் ஒன்றையொன்றின்றியமையாத, ஒருமையின் இருமை; பூர்வ உத்தரம். பூர்வம் உத்தரத்துக்கு ஆதாரம் என்னும் பொருட்டு.

பூர்வம் உத்தரம் என்ற பரிபாஷையை, வைதிக சைவத்துக்குப்போல முதல் நூல்களாய வேதாகமத்துக்குங் கொள்ளலாம்.

வேதம் - பூர்வம். ஆகமம் உத்தரம்.

உலகியலில் நிற்குங்கால் வேதமும், அருள்நிலைப் படுங்கால் ஆகமமும் உரிய என்பது சித்தியார்.

ஒருமையின் இருமைகளாகிய வேதாகமங்களை, வேதம் வேறு ஆகமம் வேறு என்று கண்டஞ் செய்து,

வேத சமயம் ஆகம சமயம் என இரு சமயங்கள் சிருட்டி செய்வது வைதிக சைவ விரோதம்.

நடைமுறையி லிருக்கும் இந்துசமய பாடத்திட்டம் மேற்குறிப்பிட்டவாறு கண்ட துண்டஞ் செய்து,

வைதிக சைவ விரோதத்தை வளர்க்க வழி செய்கின்றது.

இந்த மூண்மரம் மெல்ல மெல்ல வளருமேல் ஒரு காலத்தில்,

ஆரிய திராவிட விரோதத்துக்கு வணக்கஞ் செய்து,

தமிழருச்சனை இங்கிலிசருச்சனை என்று தொடங்குகிற குழந்தைக்குப் பால் சுரந்து கொடுப்பதொரு விருட்சமாய்விடும்.

—

நல்லைக் கீர்த்தனம் — 1,

## ஆறுதல் கொண்டேனையா!

★

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம்: ஷண்முகப்பிரியா தாளம்: ஆதி.

பல்லவி

நல்லைக்கும ரையாஉன்னை நாடினேன்நான் வேறுதுணை
இல்லைஐயா! இகத்திலென் வல்வினைய கற்றுமையா!!

அநுபல்லவி

முல்லையெனும் வாசமிகு நல்லதமிழ் மாலைகட்டி
மெல்லவுன்றன் பாதம்வைத்து மேதினியில் பூசைசெய்வேன்

சரணம்

ஆறுமுகங் கண்டபோது ஆறுதல்நான் கொண்டேனையா
ஆனைமுகன் தம்பியுன்னை அனுதினம் நம்பினேன்நான்
வீறுகொண்டு வேலெடுத்து வீணரக்கரை அழித்தாய்
வேதப்பொரு ளானவனே! வேலவ னேவிளங்கும். (நல்)

# யாழ் - மத்திய கல்லூரியில் ஐயன் பெருமாள் கோனார்

(23-5-62) புதன்கிழமை யாழ் - மத்திய கல்லூரித் தமிழ் மன்றத்தின் சார்பில் வித்துவான் ஐயன் பெருமாள் கோனார் (தமிழ் விரிவுரையாளர், திருச்சி. அர்ச் சூசையப்பர் கல்லூரி) 'கம்பன் கவி இன்பம்' என்னும் பொருள்பற்றிப் பேசினார். கூட்டத்துக்கு ஆசிரியர் திரு. ஷண்முக குமரேசன் தலைமைதாங்கினார். செல்வன் கு. சிற்றம்பலம், 'தமிழ்த்தாய் வணக்கம்' பாடக் கூட்டம் தொடங்கியது.

தலைமையுரையில் திரு. ஷண்முக குமரேசன் வித்துவான் ஐயன் பெருமாள் கோனாரிடம் தாம் சில நாட்கள் தமிழ் பயின்றதையும் அன்னாரின் படிப்பினையும் ஆற்றலையும் பேசுந்திறனையும் எடுத்துக்காட்டினார். யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் பேர்சிவல்துரை, ஆறுமுகநாவலர், ஆ முத்துத்தமபிப்பிள்ளை, கலைப்புலவர் நவரத்தினம் முதலியோர் தொண்டாற்றியதையும் குறிப்பிட்டார்.

திரு. ஐயன் பெருமாள் கோனார் எப்படிக் கம்பன் வால்மீகி தந்த இராமாயணத்தைச் சுவைபட, எளிமையாககி இனிமையுடன் இந்தான் என்பதை விளக்கினார். கம்பன், வள்ளுவன், இளங்கோ ஆகிய மூப்பெரும் புலவர்களும் சொற்களை ஆண்ட முறையை எடுத்துககாட்டினார், மிதிலைக்காட்சி முதலிய படலங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டினார். பாட்டுக்களின் ஓசை நயம் புரியுமாறு பாடியும் காட்டினார். "தமிழுக்குக 'கதி' யாவார் இருவர்" என்னும் கூற்றில் 'க' கம்பரையும 'வ' வள்ளுவரையும் குறிப்பிடுகின்றன என்பதையும் விளக்கினார். செல்வன் குணசிங்கம் நன்றியுரை வழங்கினார்.

—

# வறுமை தீர்க்க வளம் பெருக்க வேண்டும்

—:0:—

## மாவட்ட நீதிபதி அறிவுரை

"இன்று நம் மக்களிடத்தில் சமுதாய முன்னேற்ற எழுச்சி இல்லை. அரசியல் எழுச்சியே இருக்கிறது. இளைஞர் முதல் வயோதிபர் வரை என்றும் அரசியல் விஷயங்களே பேசுகிறார்கள். தற்போது 'அரசியல்' நேர்மை குன்றிவருகிறது. கட்சிக் கொள்கைகளைப் பேசாது குறிப்பிட்ட நபர்களையே தாக்கிப் பேசுவதை நாம் காண்கிறோம். இந்த நோய் மாறவேண்டும். தகுந்தவர்களிடம் அரசியலை விட்டுவிட வேண்டும்."

இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. செ, தனபாலசிங்கம் வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டு மூன்றாம் நாள் இறுதி நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசியதாவது:-

அஞ்சவேண்டியதற்கு நாம் அஞ்ச வேண்டும். வயிற்றுப் பசியைநாம்போக்கவேண்டும். தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் இந்த செகத்தினை அழித்திடுவோம் என்னும் பாரதி வாக்கு நன்கு சிந்திக்கத்தக்கது. வாழ வகைதெரியாமல் நம்மில் பலர் இருக்கிறார்கள். சிலர் 'பொலிடோல்' குடித்து மடிகிறார்கள். இன்று வாழ மருந்து தெரியாமல் சாவதற்கு மருந்து கண்டு பிடித்துவிட்டார்கள். இந்த நிலை மாறவேண்டும். வாழ்க்கையைச் செம்மைப்படுத்த வழிகாட்டியாகவுள்ளது திருக்குறள். அதன்வழி நாம் நடக்க வேண்டும்".

சரவணையூர் பண்டிதர் க. இராசையா. வேலணையூர் பண்டிதர் மா. பாணிக்கப, திரு. சாலை. இளந்திரையன், பேராசிரியர் கோனார் ஆகியோர் இம்மகாநாட்டில்சொற்பெருக்காற்றினர்.

திருவாட்டி சரசுவதி பாக்கியராசா லிங்கம் 'சகோதரர்கள் ஆகியோரின் இனிய இசைவிருந்தும், நடனப்பேராசிரியர் திரு நல்லையாவின் மாணவிகளின்நடனவிருந்தும் மகாநாட்டில் இடம்பெற்றன. ஈற்றில் 'சங்கிலியன்' என்ற சிறந்தநாடகம் நடித்துக்காண்பிக்கப்பட்டது.

—

## அவனன்றி யோரணு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ரங்களும் தேவர்களும் ஏனைய உயிர்களும் அழிந்தன. ஆயிரம் சதுர்யுகங்கொண்ட இராக்காலம் முடிய பிரமா துயில் நீத்தார். மற்றப் பகற்பொழுதாரம்பித்தது பிரமா சந்திர சூரியர் தேவர்கள் உயிர்கள் எல்லாவற்றையும் படைத்தார், அத்தன்மையாகிய சிருட்டியைப் பார்த்து மிகப் பெரிதென்றுன்னித் தன்னையொழிய வேறொரு கடவுளில்லையென்று கர்வங்கொண்டார். விட்டுணு பாற்கடலில் அகந்தையோடு அறிதுயில் கொள்வதைக் கண்டு அவருடைய மார்பிலே தாக்கி 'நித்திரை விட்டெழுபுபும்' எனக் கூறினார். இருவருக்குமிடையில் ஒருவாதம் உண்டானது. பிரமா தான்படைப்புத் தொழிலைப் புரிகின்றமையினால் தான் பிரமம் என்றார். விட்டுணு தான் காத்தல் தொழிலைப் புரிகின்றமையினால் தான் பிரமம் என்றார். இவ்விதமான வாதம் இருவருக்கும் கோபத்தையுண்டாக்கியது. போரைப் புரிந்து வெற்றிகொண்டவரே மேலானவர் என்று கூறி இருவரும் நீண்ட காலம் போர் செய்தார்கள். இப்போருக்கஞ்சித் தேவர்கள நடுங்கினார்கள். சிலர் அழிந்தனர். உயிர்கள் அழிந்தன, அப்பொழுது சிவபெருமான் அவ்விருவருக்கும் மத்தியில் ஒரு அக்கினி மலை போலத் தோன்றினார். அதனைக் கண்டஞ்சி அவர்களிருவரும் தூரத்தே நின்றார்கள். 'சிறுவீர்காள் உங்கள்வலிமையைச் சிவபெருமானே காண்பார் நீவிர் இருவரும இந்தச் சோதியின அடியையும் முடியையும் காணுங்கள்" என்று அவர்களுக்குக் கேட்கும்படி ஆகாயததில் ஒரு அசரீரி வாக்குப் பிறந்தது. பின்பு இருவரும் அச்சோதி மலையின் அடியையும் முடியையும் காண முற்பட்டனர். யார் அடிமுடிகளிலொன்றினை முன் காண்பாரோ அவரே முதற் கடவுளாவர் எனத் துணிந்தார்கள். விட்டுணு பன்றிவடிவெடுத்துப் பூமியை அகழ்ந்து சென்று அடியைத் தேடிச் சென்றார். பிரமா அன்னப்பட்சி வடிவுகொண்டு முடியைத் தேடிச் சென்றார். நெடுங்காலம் சென்றும் விட்டுணு அடியைக் காணமுடியவில்லை. அவருடைய வலிமை குன்றியது. கருவிகள் ஓய்ந்தன. மீண்டு பூமிக்கு மேல் வரவும் ஆற்றலில்லை. அச்சமயத்தில் அரனடியைச் சிந்திக்கவலிமைவந்தது. பூமியையடைந்து சோதிக்கணித்தாகச் சிவபெருமானை வழிபட்டுக் கொண்டிருந்தார்.

—தொடரும்.

# அவனன்றி யோரணுவு மசையாது

பூமியைச் சுற்றி வந்த ஒரு ருஷிய வான வெளி வீரன் தான் தனது வானக்கருவியில் சென்ற மார்க்கத்தில் கடவுளைக் காணவில்லை யெனவும் அத்தகைய பொருளினுதவி மனிதனுக்குத் தேவையில்லை யெனவும் தனது ஆறறலினல் செயற்கரிய செயல்களைப் புரிய முடியுமெனவும் கூறிய தாக அறிகின்றோம். அவ்வீரனுடைய கூற்று ஆத்திகர்களுக்கு ஆத்திரத்தையும நாத்திகர்களுக்கு மகிழ்ச்சியையுந் தரும். அவ்வீரனுடையகூற்று இக்கால மாணவர்களிடையே நாத்திகக் கொள்கையைப் பரப்பத் துணையாகவிருக்குமாகையினல் கடவுளுண்மையை அவர்கள் உணர்ந்து கடவுள் வழிபாட்டில் ஈ'படும்வண்ணம் இக்கட்டுரையை வரைகின்றோம்,

''அகரமுதலவெழுத்தெல்லாமாதி பகவன்முதற்றே யுலகு''

எழுத்துக்களெல்லாவற்றுக்கும் அகரம் முதலாகவிருக்கின்றது. அகரம் எழுத்துக்களின் வரிசையில் முதலாகவிருக்கின்றது ஒவ்வொருஎழுத்தையும் உச்சரிக்க முயலும் பொழுது வாயை முதலில் திறக்க வேண்டும். ('அ ஆ அங்காப்புடைய' என்ற இலக்கண விதியின்படி) வாயைத் திறக்கும்பொழுது அகரம தோன்றித்தான மற்றைய எழுத்தொவ்வொன்றும் உச்சரிக்கப்படும். மேலும் அகரம் மற்றைய எழுத்துக்களுக்கும் புறம்பாகவுமிருக்கின்றது. ஆகவே அகரம் எழுத்துக்களுக்கு முதலாகவும் உடனுகவும்வேருகவும் இருக்கின்றது, அத்தன்மையைப்போல கடவுளும் உலகுக்கு முதலாகவும் உடனுகவும் வேருகவுமிருக்கின்றார்.

உலகம் சித்துப் பொருளையும் அசித்துப் பொருளையும் கொண்டுள்ளது. அது தோன்றி நின்று அழியும் தன்மையுடையது. ஆதலினல் உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கிறதற்கு ஒரு முதல்வன் வேண்டும். அம் முதல்வனே கடவுள். கடவுள் என்றும்உள்ளவர். எங்கும்நிறைந்தவர். அவரில்லாத இடமில்லை. எல்லாம் அறிபவர். அவர் எல்லாம் வல்லவர். அவர் அளவிடப்படாத ஆனந்தமுடையவர். அவர் தம்வயமுடையவர். அவருக்கு ஒப்பாரும் மிக்காருமில்லை. அவரே சர்வலோகத்துக்கும் நாயகர். அவர் ஆன்மாக்களுடைய நன்மைக்காகவேஎத்தொழிலையும் செய்கின்றார். அவர் ஆன்மாக்கள் மீது கொண்டுள்ள கருணையே அவருடைய சக்தி. அக் கருணையே அவருடைய திருமேனி.

'கடவுள்' என்ற பதமே அவரை அறிய முடியாதென்பதைக் குறிக்கின்றது. 'கட+உள்' = கடவுள் என்ற பதகதை 'கட+உள்' எனப்பிரிக்கலாம். உள் என்பதன் பொருள் சிந்தித்தல். ஆகவே கடவுள என்பதன் பொருள் சிந்தனைக்கப்பாற்பட்டவர் என்பதாகும். அவரை மனத்தினலும் புலன்களாலும் மற்றக் கரணங்களாலும் கிரகிக்கமுடியாது. மனிதன் கற்கின்ற சகல கலைகளினலும் அவரை அறிய முடியாது. கலைக்கல்வி பாச ஞானம், பாசஞானத்தினல் இறைவனை அறியமுடியாது. பதி ஞானத்தினல் தான் இறைவனை அறிய முடியும். பதிஞானம்தான் இறைவன் திருவடி ஞானம் அல்லது திருவருள் ''அவனருளே கண்ணுகக் காணினல்லால் இப்படியன் இந்நிறத்த னிவ்வண்ணத்த னிவ னிறைவனென்றெழுதிக் காட்டொணாதே'' என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கு இவ்வுண்மையை வலியுறுத்துகின்றது.

ஆன்மா சிற்றறிவுடையது. வினைக்கீடாகப் பல பிறவிகளை எடுக்கும் அது பர தந்திரமானது. அறிவிக்க அறியும் இயல்புடையது. ஒருவன பிறக்கு முன் எங்கிருந்தான் என்பது அவனுக்குத் தெரியாது. இறந்த பின் எங்கு செல்வானென்பதும் அவனுக்குத் தெரியாது. அவன் பிறந்து இறக்கும்வரை பூமியில் மானிட வடிவுடன் வாழ்கின்றான். ஆணவ மறைப்பினல் அவன் கடவுளை மறந்து நான் எனது என்ற செருக்குடையவனுக வாழ்கின்றான். செல்வனுகவிருந்தால் அச் செல்வம் தன்னுடையதெனவும் ஒரு செயலைப் புரிந்தால் அதனைத் தான் செய்ததாகத் தன்னைப் பெரிதாக மதித்தும் கர்வங்கொள்ளுகின்றான். காலகதியில் கடவுள் திருவருளினல் அவனுடைய ஆணவத்தை நீக்கி அவனுக்குத் திருவடி ஞானத்தை உதவுவார் என்பது சைவ நூற்றுணிபு அவ்வாறுகச் சிவபெருமான் அகந்தையை நீக்கி மெய்யுணர்வை யளித்த வரலாறு என்று கந்தபுராணத்தில் அடிமுடி தேடுபடலத்திற் காணப்படுகின்றது,

ஆயிரம் சதுர்யுகம் பிரமாவுக்கு ஒரு பகற்காலம். அக்காலம் கழிந்தால் பிரமா துயில கொள்வார். அங்ஙனம் ஒருகால் பிரமா துயின்றபொழுது சூரியன் சந்திரன் முதலாகிய கிரகங்களும் நக்ஷத்தி

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

— "மயூரன்" —

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வண்ணார்பண்ணை மேற்கு,
தம்பையா சின்னத்துரை கைம்பெண் நாகேஸ்வரி —வழக்காளி.
வழ. இல. MB/3481,
எதிராக
கஸ்தூரியார் றேட்
1. கயித்தான் மொறிஸ் கைம்பெண் மாரிமூத்து
2. மரியாம்பிள்ளை செவஸ்தியாம்பிள்ளையும், மனைவி
3, பிலோமின அம்மாவும்.
—எதிராளிகள்,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB/3481-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகள் 1962 ஞு யூன் மீ 16 உ (16 - 6 - 62) சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல் வட்டி ரூபா 547/50 சதம். மேலும் 300 ரூபாவுக்கும் 4–7–60 திகதி தொடக்கம் 13–12–60 வரைக்கும் வருட மொன்றுக்கு 15% வீத வட்டியும், அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 147–45 சதம். இதில் 250/- ரூபாவும் 300/- ரூபாவும் எதிரிகளால் கொடுபட்டிருக்கிறது. கணக்கு விபரப்படி இன்னும் வருமதி ரூபா 179–51 சதம்.

காணிகள் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை ''திமிலமன்று புளியடி'' குளிகள் $3\frac{1}{2}$ இந்த $3\frac{1}{2}$ குளிகளுக்கும் எல்லை கிழக்கு கஸ்தூரியார்றேட், வடக்கு முடிக்குரிய ஆதனப், மேற்கும், தெற்கும் சின்னட்டி கணபதிக்கும் பங்காளர்களுக்கு முரியஆதனம். பதிவு D 234]288,

2. ஷெ கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடகிழக்கிறை''காட்டுத்தறை'' நிலப்பரப்பு 1. ஆனல் 10-10–46 உத்தரவுபெற்ற அளவையாளர் J. D. வீரசிங்கம் அவர்களால் 130-ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்டதும், யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் 2768 - ம் இலக்க பிரிவிடுதல் வழக்கில் அணைக்கப்பட்டதுமான பிளானில் கண்ட நிலப்பரப்பு 1. குளிகள் 2.3 வீடும், கிணறும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கு கஸ்தூரியார் றேட்டும் கணபதி செல்லப்பாவுக்குமுரிய ஆதனம். வடக்கு முடிக்குரிய ஆதனம், மேற்கு செல்லப்பா இராசகோபாலுக்குரிய ஆதனம், தெற்கு தர்பு தம்பிராசாவுக்கும் மனைவி யோகாம்பாளுக்கு முரிய ஆதனம். பதிவு D 234/289,

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.
643 காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம், 27–4–62,
M 19 18-5-62,

பண்டிதர் பிரமஸ்ரீ வ.மு இரத்தினேசுவரஐயர் அவர்களின்

## 80-ஆவது வயது நிறைவு குறித்து

பள்ளத்தூர் பண்டிதஸ்ரீ மு. முத்துவேங்கடாசலமையர் அவர்கள் கூறிய வாழ்த்து.

கரும்பின் சுவையோ கனிச்சுவையோ என்ன
விரும்ப வுரைத்திடுநா வீறன் – பெரும்புலவன்
எம்மிரத்தி னேசுரன்சீர் எண்பாணுண் குற்றனன்
இம்மகியில் வாழ்க! இனிது.

x x x

## பண்டிதமணி உரைத்த வாழ்த்து

வயசு முதிர்ந்தவர்களாகிய ஐயா அவர்களின் மனசைக் குளிரச் செய்வதே, நமதுநாட்டில்சைவப் பயிரையும் தமிழ்ப்பயிரையும் வளரச்செய்வதற்குப் பொழிகின்ற நல்லமழையாகும்.

ஐயா அவர்களின் முதிர்ந்து கனிந்த மனசு சிவத்தியானத்திலே இடையீடின்றி ஈடுபடுதற்கும், உலகக் கவலைகளிலே சஞ்சாரம் செய்யாது அமைதியுறுதற்கும் ஆவன அனைத்தையும் பூர்த்தி செய்து வைக்கும் பணியில் நம்மையெல்லாம் அந்தத் திருவருள் ஈடுபாடு செய்வதாக. அதுவே நமது நல்ல சம்பாத்தியம்.

'போம்பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம்.

சி. கணபதிப்பிள்ளை,
கலாசாலைவீதி,
திருநெல்வேலி, 3–5-62.

இவ்வாரம் (27-5-62 — 2-6-62)

## உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தம்பி தங்கைகள் மிகவும் உதவிகரமாக இருப்பர். தொழில் வெற்றியும் புதிய முயற்சிகளில் வெற்றியும் நிச்சயம். ஆனல் சிறு உடல் நிலைக் கோளாறுகளுக்கு இடமுண்டு.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

தந்தையாரின் உடல்நிலை பாதிக்கப்பட லாம். தந்தைவழி உறவினரால் தொல்லைக்கும் இடமுண்டு. தொழிலளவில் ஓரளவு நல்ல வாரம், உமது உடல் நிலையும் பாதிக்கப்படும்.

மிதுனராசி மிருகசீரிடம், 2 4,3. திருவாதிரை, புனர்பூசம் 1, 3 4ம் பாதம்.

தொழில் ஈடுபாடுகளுக்கு மிகப் பொருத்தமான வாரம், நண்பர்களும் உறவினர்களும் மிக உதவியாக இருப்பர். எதிர்ப்புக்களை உம்மால் தாண்டிவிட முடியும். ஆனல் வேலை கூடுதலாக இருக்கும்,

கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

குடும்பநிலை தொடர்ந்து குழம்பலாகவே இருக்கும். தொழிலளவில் ஓரளவு நல்ல வாரம், நில புலங்களால் வருமானம் உண்டாம். ஆனல் மன நிம்மதி இருக்காது. முதல் நாளை எச்சரிக்கையோடு கழிக்கவும்.

சிங்கராசி மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

எதிரிகளை வெற்றி கொள்ள உம்மால் முடியும். தொழில் வெற்றியும் நிச்சயம். தந்தையாரின் உடல் நிலையும் பாதிக்கப்படும். திங்கள் செவ்வாயும் புதன் காலையும் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும்.

கன்னிராசி உத்தரம் 2, 3, 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

மேலும் சிலகாலத்திற்கு உடல் நிலை பிரச்சினைக்குரியதாகவே இருக்கும். குடும்பநிலை மேலும் குழப்பமாகவே இருக்கும். தவறுன விளக்கங்களுக்கும் இடமுண்டு. புதன் வியாழனையும் வெள்ளி காலையையும் எச்சரிக்கையோடு கழிக்கவும்.

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

வியாபாரத்திற்கு ஏற்ற வாரம். பண இலாபங்களும் நிச்சயம். ஆனல் குடுப்ப குழப்பங்கள் உண்டாம். உமது உடல் நிலையும் பாதிக்கப்படும். வெள்ளி மாலை, சனி எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும்.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

உமது சொந்தப்பிரச்சினைகள் சில தீர்வுறும். குடும்ப நிலை சீர்திருந்த வேண்டும். எல்லா எதிர்ப்புக்களையும் உம்மால் தாண்டிவிட முடியும் எதிரிகளுக்கு இன்னலும் ஏற்படும்,

தனுராசி மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

உடல்நிலை மேலும் பிரச்சினையாகவே இருக்கும். பித்த வயிற்றுக் கோளாறுகள் உண்டாம். குடும்ப நிலையும் திருப்திகரமாயிருக்காது ஆனல் எதிரிகளுக்கு இடையூறு நிச்சயம்.

மகராராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

மன அமைதி இருக்காது. குடும்பத் தகராறுகளும் உண்டாம். ஆனல் தொழிலளவில் நல்ல வாரம், பழைய முதலீடுகள் இலாபந்தரும்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

நிலபுலங்களால் வருமானம் கிடைப்பது நிச்சயம், உடன் பிறந்தோர் உதவியாயிருப்பர். எதிர்ப்புக் கரைந்தோடிவிடும், ஆனல் மன நிம்மதி இருக்காது,


மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

உடல் நிலை திருந்தும். தொழில் வெற்றி நிச்சயம். தாய்வழி உறவினர் உதவுவர் நிதியைப் பொறுத்தவரையிலும் இது ஒரு நல்ல வாரம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் குருபூசை

சைவபரிபாலன சபையாரின் நாவலர் நினைவு மண்டபத்தில் 22 – 5 – 62 செவ்வாய்க்கிழமை மேற்படி குருபூசை நன்கு நடந்தது. அன்று பகல் சிவபூசை, மகேசுரபூசையும், இரவு சொற்பொழிவுகளும் நடந்தன.

தமிழ்ப் பண்டிதர் வ. மு. இரத்தினேஸ்வரஐயர், கொக்குவில் திரு. த. குமாரசுவாமிப்புலவர், சைவப்பிரசாரகர் திரு. பொன். அப்புக்குட்டி முதலியோர் திருஞானசம்பந்தர் ஞானப்பாலுண்டமையால் அமைந்த பயன். திருமணத்தில் வந்தோர்க்கும் மோட்சம் கிடைத்த அற்புதம், திருஞானசம்பந்தர் சைவசமயத்தை வளர்த்துப் பேரற்புதங்கள் செய்த அருள் நிறைவு முதலாகப் பல பொருள்களை விளக்கிப் பேசினர்கள், திரு. கல்யாணசுந்தரக் குருக்கள் தேவாரங்களை இன்னிசையுடன் பாடி யாவருக்கும் விருந்தளித்தார்கள்.



யாழ்ப்பாணம்

## —ஐக்கிய இலாப நிதி—

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


தேயர்கள் நெஞ்சம்

# திருக்குறள்

## வகுப்புக்கள் தேவை

'திருக்குறள்' வாழ்க்கைக்குத் துணையான பொதுநூல் அரசியலை விரும்புவாருக்கு அரசியல் நூல். ஞானத்தை விரும்புவார்க்கு ஞானநூல் பண்டைத் தமிழரின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் நூல்களில் 'திருக்குறள்' தலைசிறந்தது. மனிதன் மனிதனுக வாழுவதற்கு இந்நூல் ஓர் வழிகாட்டி நூலாகும். ஒரு நாட்டுக்கு அல்லது ஓரினத்திற்கு உரிமையில்லாது உலகிற்குப் பொதுவான நூலாகத் திருக்குறள் இருப்பது தமிழர்களுக்குப் பெரும் சிறப்பைத்தருகிறது. பொதுமறையாம்தமிழ்மறையைப்போற்ற 'மகாநாடுகள்' கூட்டப்படுவது அவசியமானது. இவ்வகையில் தமிழ்மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் சேவை பாராட்டத்தக்கது.

அண்மையில் வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மகாநாட்டைப் பயன்பெற நடத்தியமைக்காக வேலணை வாலிபர்களை நன்கு பாராட்ட வேண்டும். இந்த மாநாடு யாழ். மாவட்டத்திலேயே எழுச்சியை ஏற்படுத்திவிட்டது. எழுச்சியின் அறிகுறியாக நாம் ஒரு நற்பணியில் ஈடுபடவேண்டும்,

இன்றைய இளைஞர் சமுதாயம் மஞ்சள் புத்தகங்களையுப் சினிமாப் படங்களையுமே பெரிதும் விரும்புகிறது. இந்நிலைமை மாறவேண்டும். மாற்றியமைக்க அறிஞர்கள் முற்பட வேண்டும். பொதுசன முன்னேற்ற இயக்கங்களாகிய சனசமூக நிலையங்கள் கி மு. சங்கங்கள் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் கிராமங்கள் தோறும் திருக்குறள்வகுப்பு நடத்தவேண்டும். இதற்கான தகுந்த ஆசிரியரை அந்தந்தக் கிராமத்திலிருந்து தெரிவு செய்து நடத்தலாம். வேலணை மகாநாட்டைத் தொடர்ந்து இப்பணியைச் செய்யவேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழ் மறைக்கழகமும் இதற்கான முயற்சியில் ஈடுபடவேண்டும் எனவும் விரும்புகிறேன்.

சே. சுப்பிரமணியம்,
தலைவர், சரவணை ச. ச. நிலையம்.
சரவணை. வேலணை.


### இந்துசாதனம்

சந்தா விபரம்:-

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. 9-00 |
| கல்வி நிலையங்களுக்கு | 4-50 |
| அரை ஆண்டு சந்தா | 4-50 |

'இந்துசாதனம்"
வண்ணுர்பண்ணை,
யாழ்ப்பாணம்.


## மேலே வீதியிலும் விசைவண்டி மறிப்பிடம் வேண்டும்

யாழ்ப்பாண விசைவண்டி (பஸ்) நிலயத்திற்கும் வண்ணுர்பண்ணை அஞ்சலகத்திற்கும் இடையில விசைவண்டி நிறுத்தும் — ஏற்றும் இடம கிடையாது. காரைநகர், மானிப்பாய், இளவாலை, சங்கானை, வட்டுக்கோட்டை முதலிய இடங்களுக்குப் போகும் மக்கள் புகைவண்டி நிலையத்தில் போய்ஏறவேண்டி இருக்கிறது. இத்தனை தூரம் வெயிலில் செல்வதானுல் எவ்வளவு கஷ்டம் என்பதை அறிந்து இ. போ. ச. அதிகாரிகளும் நகராட்சிஅதிகாரிகளும், வீதி காவல்துறை (பொலிஸ்) அதிகாரிகளும் கூடி ஆலோசித்து நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமான கடமையாகும்.

க. பரமலிங்கம்,
வண்ணுர்பண்ணை.

# சேதுப்பிள்ளை நினைவுக் கட்டுரைப் போட்டி

சென்னைப் பல்கலைக்கழக தமிழ் ஆராய்ச்சித் துறைத்தலைவராகப் பணியாற்றியவரும் இலக்கிய ஆற்றல் கருதி கலாநிதிப் பட்டம் அளிக்கப்பெற்றவருமான பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளையவர்களின் நினைவாகக் கட்டுரைப்போட்டி ஒன்று நடைபெறஇருக்கிறது. போட்டியில் முதலாம், இரண்டாம், இடங்சள் பெறுவோர்க்கு பரிசுகள் வழங்கப்படும்.

கட்டுரைக்குரிய பொருள் :

1. சேதுப்பிள்ளையின் தமிழ்த்தொண்டு. (பேச்சு, எழுத்து, ஆராய்ச்சி)

அல்லது,

2. சேதுப்பிள்ளையின் பின்வரும் நூல்களுள் ஒன்றைப்பற்றிய விமர்சனம்.

(அ) வேலும் வில்லும், (ஆ) அலையும் கலையும், (இ) தமிழ் விருந்து (ஈ) தமிழின்பம்.

18-7-62 இற்கிடையில் ("போட்டி ஆசிரியர்", பேராசிரியர் சேதுப்பிள்ளை நினைவுக்கட்டுரைப் போட்டி,
"இந்துசாதனம்' வண்ணுர்பண்ணை, யாழ்ப்பாணம்)
என்ற விலாசத்திற்கு கட்டுரைகளை அனுப்பி வைக்கவும்.

# சிவசம்பந்தமும் திருவுருவங்களும்

"சைவம் சிவத்துடனே சம்பந்த
மாதலென
சைவாகமமுரைக்கும் சத்தியங்
கேள் - செவ்விதாய்
நீங்காம லுட்புறம்பு நீக்காத
நற்சிவனை
நீங்காமை சைவ நிலை"
(வாதுளாகமசார
அத்துவித வெண்பா.

அனுதியாகவே ஆன்மாவுக்கும் சிவத்துக்கும் உள்ள சம்பந்தம் சிவ சம்பந்தமாகும். இச்சிவசம்பந்தமே சைவம் எனப்படும்.

சிவாகமங்களில் கூறும் உண்மையான சிவ சம்பந்தம் தூல சூக்தும காரண முத்தனுக்களை சிவ தீக்ஷையினுல் சிவாசாரியர் மந்திர பிண்டமாக்கி அங்குட்டமாத்திரம் பிரமம் ஆகிய இருதய வடிவினதான சிலாலிங்கத்தில் சீடனது சிவகலை சிவகலைகளைப் பிடித்துத் தாபித்து அந்த லிங்கத்தை தூல உடலிலுள்ள ஜீவனிலும். சூக்கும உடலிலுள்ள மனத்திலும் "மனமணிலிங்கம்" (பிராண லிங்கம்), காரண உடலிலுள்ள அறிவிலும் "காகத் திருவிழிக்கும் ஒரு மணி போல"த தாபித்து சீடனது கரகமலத்தில் கொடுப்பது சிவ சம்பந்தம்.

"ஆனவிலய வதிகாரபோகமுன்
ருன தனுமூன்றி
லவலமறத் - தானிலிய
சம்பந்தம் நீங்காமை
சைவமெனு மாகமங்கள்
சம்பந்தம் சொல்லும் தரம்"
—வாதுளாகமசார
அத்துவித வெண்பா.

இச்சிவாத்துவித வெண்பா திருவாவடுதுறை பண்டாரச் சன்னிதி நமச்சிவாய மூர்த்திகளின் முதல் சிஷ்யரான மெய்கண்ட சந்தானம துறையூர் சிவப்பிரகாச சுவாமிகளால் சொல்லப்பட்டது.

—தொடரும்.

சிவ ஐயம்பிள்ளைக்குருக்கள்,
கீரிமலை

## விசாகதின பஜனைக் கோஷ்டி

அகில இலங்கைப் பொதுஜன சேவைச்சங்க சமயப் பிரசாரசபை, சைவசமய ஞான விருத்திச் சங்கம், திவ்ய ஜீவனசங்கம் ஆகிய மூன்று சபைகளினது ஒத்துழைப்புடன் 18-5-62வெள்ளிக்கிழமை இரவு 9-30மணியளவில் நல்லூர்க் கந்தசுவாமிகோவிலிருந்து பதினுன்கு மைல்களுக்கப்பாலுள்ள செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு திருமுருகனின் உருவப்படத்துடனும், காவடியுடனும் பஜனைக் கூட்டம் ஒன்று வைகாசி விசாக நடைபஜனைக் குழுவாகப் புறப்பட்டது. புறப்படமுன் வடமாகாண முன்னைநாள் அரசாங்க அதிபர் திரு. M ஸ்ரீகாந்தா அவர்கள் சொற்பொழிவாற்றுகையில் இவ்விதமான சமயத் தொண்டுகள் மேன்மேலும் விருத்தியடைந்து வருவதாகவும். அதன் வளர்ச்சியால் சைவசமயம் மேலோங்கி வளர்கின்றதெனவும் அதைத் தளரவிடாது சங்கங்கள் ஒத்துழைத்துப் பாதுகாக்க முன்வந்தது போற்றுதற்குரிய அரிய தொண்டெனவும், பொதுமக்கள் யாவரையும் இப்பணியில் ஒத்துழைக்கும்படியும் வேண்டிககொண்டார், அன்னுர்க்கும் திருவாளர்கள் S கந்தசுவாமி, S. M. விசுவலிங்கம், திரு. செல்லத்துரை, ஆதிரத்தினம் ஆகியோர்க்கும் அகில இலங்கைப் பொதுசன சேவைச்சங்கக் காரியதரிசி திரு. த இராசரெத்தினத்தால் மலர்மாலைகள் சூட்டப்பட்டன.

### நயினுதீவு கொடியேற்றம்

இவ்வாண்டு நயினுதீவு நாகபூசணியம்மன் மகோற்சவ ஆரம்பம் எதிர்வரும் 3-6-62 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கிறது.

x x x

29-5-62 செவ்வாய்க்கிழமை நல்லூர் கந்தசுவாமிகோயில் சங்காபிடேகம் நடைபெற இருக்கிறது.

### கருத்துக் கலசம்

வாழ்வின் சகல துறைகளிலும் தமிழுக்கு முதன்மை இடம் கொடுக்கத் தவறின் நாம் தமிழர்கள் என்று பேசிக்கொள்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது.

-பண்டிதர் கா, போ. இரத்தினம்.

x x x

ஒற்றைக் கருத்தினை
ஓராயிரப்பக்கம் ஓடுகிற

கற்றை நெடுநாவல் மீதினிற்
கண்டு களிப்பவருள்
சற்றைப் பொழுதினிற்
சாகாத இன்பம் தருங்கவிதை
கற்றுத் தெளிந்து களிவாரை
எங்ஙனம் காணுவதே.

-மகாகவி

## சுகமான சோதிடம்!



**பெரியவர்:** உலகம் அழிய இன்னும், ஆக 2347050925 ஆண்டுகள்தான் இருக்கின்றனவாமே அதுவும் பரணி நட்சத்திரத்திலே தரணி அற்றுப்போய்விடும் என்று சோதிடம் சொல்லியிருக்கிருர்ஒரு அறிஞர். என்னுடைய நட்சத்திரமாச்சே!

**விகடன்:** தாராளமான சோதிடம்தான். இராமருடைய ஒரு வெள்ளஞ் சேனையில் இரண்டு இராணுவவீரரைக் காணவில்லை மிகுதி எவ்வளவு என்று கேட்டவருக்கு மறுமொழி கொடுத்த மாதிரி அல்லவா இருக்கு பெரியவரே உங்கள் பரணியைப்பற்றிய கவலை! சங்காரம் வரும்பொழுது சோதிடரும் நீங்களும் இருந்து பாருங்கள் ஐயா!

## நாயன்மார்கட்டு ஸ்ரீ இராச இராசேசுவரி அம்பாள்மகாசபைக்கூட்டம்

யாழ். நாயன்மார்கட்டு பேச்சியம்பாள் கோவில் என வழக்கும் ஸ்ரீ இராச இராசேசுவரியம்பாள் கோவில் மகாசபைக் கூட்டம் மேற்படி கோவில் மண்டபத்தில் 20-5-62 ஞாயிறு மாலை 7 மணியளவில் யாழ். சைவபரிபாலன சபைத் தலைவரும் மூடிக்குரிய நியாயவாதியும், பதில் மாவட்ட நீதிபதியுமாகிய திரு. த. முத்துசாமிப்பிள்ளைபவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தேவிபூசையின் பின்னர் தேவாரத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. தலைவரவர்கள் உரைநிகழ்த்தும்போது கடவுள் வழிபாட்டின் அவசியத்தை வற்புறுத்தியதோடு தேவிவழிபாட்டின் தொன்மை, அதனுல் நாமடையக்கூடிய பலாபலன்கள் என்பவற்றைத் தத்துவார்த்தமாக விளக்கினுர்கள்.

அடுத்து, தேவிஸ்தான அறிக்கை வாசிக்கப்பட்டு சபையாரின் அங்கீகாரம்பெறப்பட்டது. சபையோர் குறிப்புரையின்போது ஆசிரியர் திரு. ச, சதாசிவம் (துரைச்சாமி) அவர்கள், கொட்டிலாகக் கிடந்த இக்கோவில் பரிபாலனசபையின்நிர்வாகத்தின் இம்கோபுரமாகுமளவுக்கு வளர்ந்து வந்தவரலாற்றைவிளக்கியதுடன் எதிர்காலத்தில் நாம்செய்யவேண்டிய பொறுப்புவாய்ந்த கடமைகளையும் சுட்டிக்காட்டி தகுந்த நிர்வாகசபையைத் தெரிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். தலைவர் முடிவுரை, செயலாளர் நன்றியுரை தேவாரம் என்பவற்றுடன் கூட்டம் நிறைவெய்தியது.

ந.—ஸி.

## தென்கிழக்கு ஆசியாவில்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

நிறைவுறக் கட்டிமுடிப்பதற்கு மேலும் $1\frac{1}{2}$ இலட்சம் ரூபா செலவிட வேண்டும் என்றும் தென்கிழக்காசியாவிலேயே முதல்தரமானதாக தமிழர் பெருமை கூறிநிற்கப்போகும் இந்த நூல் நிலயத்தின் கட்டிட வளர்ச்சிக்கும் நூற்பெருக்கத்திற்கும் தமிழ் இளைஞர்கள் பாடுபட்டு உதவிதர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.


யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 25-5-1962 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்; த. ம. சிவப்பிரகாசம்